**உயர் கல்வி(இ1)த்துறை**

**கடித (நிலை) எண். 155, நாள். 23.6.2011**

அனுப்புநர்
முனைவர்.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6.

அம்மையீர்,

பொருள்: சுயநிதிக் கல்லூரிகள் – நிதியுதவி பெறாத தனியார் ஆடவர் / மகளிர்/ இருபாலர் பயிலும் கல்லூரியாக மாற்றம் செய்ய அனுமதி வேண்டும் கல்வி முகமைகளின் விண்ணப்பங்கள் – சார்ந்த மாவட்ட ஆட்சியருக்கும் சமர்ப்பிக்க வேண்டுவது – தொடர்பாக.

பார்வை.1. அரசாணை (நிலை) எண்.356, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.29.9.09.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசு கடிதம் (நிலை) எண்.152, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.23.6.2011.
4. அரசு கடிதம் (நிலை) எண்.153, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.23.6.2011.

******

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் அரசு கடிதங்களின்மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. இனி வரும் காலங்களில் அரசின் நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அனுமதி வேண்டி கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பிக்கும் போதே அவ்விண்ணப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள, நிலத்தின் விபரம், அந்நிலம் விவசாய நிலமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு அந்நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்ட நகர ஊரமைப்புத் துறையின் (Town and Country Planning) ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா ? மற்றும் அத்துறையின் ஒழுங்குமுறைகளின்படி (Regulations) இவற்றிற்கான மண்டலம் என்ன ? மேலும் கல்லூரிகளின் ஆய்வக கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதா மற்றும் கல்லூரிகள் அவ்விடத்தில் அமைவதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் கல்லூரிக்கான கட்டிட அமைப்பு (மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட) ஆகியவற்றின் மீது சார்ந்த மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினையும் பெற்று பரிசீலிக்க ஏதுவாக, சார்ந்த மாவட்ட ஆட்சியருக்கும் விண்ணப்பிக்குமாறு கல்வி முகமைகளுக்கு அறிவுறுத்துமாறு பார்வை நான்கில் காணும் அரசு கடிதத்தில் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

3. அதனைத் தொடர்ந்து, இனிவரும் காலங்களில் ஏற்கனவே துவங்கி நடைபெற்று வரும் கல்லூரிகளை இருபாலர் / ஆடவர் / மகளிர் கல்லூரியாக மாற்றம் செய்ய அரசின் அனுமதி வேண்டி கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பிக்கும் போதே கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சியருக்கும் விண்ணப்பிக்குமாறு கல்வி முகமைகளுக்குத் தெரிவிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

4. மேலும், இவ்வாறு கல்லூரிகளை மாற்றம் செய்யும்போது கூடுதலாக கட்டிடங்களோ / அறைகளோ உருவாக்கப்பட்டுள்ளதாக அறியப்படின் அரசு கடிதம் (நிலை) எண்.152, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.23.6.2011–இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் பின்பற்றபட்டுள்ளனவா என்பதையும் ஆராய்ந்து அதனடிப்படையில் ஆய்வறிக்கையினை தங்களுக்கு அனுப்புமாறு அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநருக்கும் அறிவுறுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
உயர் கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/ உதிரி.